## இலங்கை தேசிய மனிதவளங்கள் அபிவிருத்திப் பேரவை-2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய மனிதவளங்கள் அபிவிருத்திப் பேரவையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அட்டுறு அடிப்படையில் கணக்கு வைக்கப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்வரும் ஆண்டுகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 164,957 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

#### 1.2.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

2008 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களின் கோரப்படாத பொறுப்பாகக் காணப்படும் ரூபா 53,055 தொகையைத் தீர்த்து வைப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களிற்கு எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| எரிபொருள் | 83,330 | 21 எரிபொருள் பட்டியல்களில் எரிபொருள் இடப்பட்ட வாகனங்களின் இலக்கம் |
| பதிவுக் கட்டணம் | 16,800 | கொடுப்பனவு உறுதிப்படுத்தல்கள் |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1997 இன் 18 ஆம் இலக்க மனித வளங்கள் அபிவிருத்திப் பேரவையின் அதிகாரச்சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவு | அமைச்சருக்கு வழங்கப்பட வேண்டிய ஆலோசனைகளும் பரிந்துரைகளும் மனித வள அபிவிருத்தித் திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்துவது பற்றி ஆராய்ந்தறிவது முதலியவாறான பேரவைச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | நிதி ஆண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வருடாந்த வரைவு அறிக்கையினை பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கான வரைவு |

| | | |
|---|---|---|
| | | பாதீட்டு மதிப்பீடு பணிப்பாளர் சபையினால் 2012 மார்ச் 29 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | நிதிப் பிரமாணம் நி.பி. 371 | அங்கீகரிக்கப்பட்ட எல்லையான ரூபா 20,000 இற்கு மிகையாக மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 500,000 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட வருமானச் செலவினக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகை என்பன தயாரிக்கப்பட்டு பாதீட்டுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டி | நிர்மாண நடவடிக்கைகள், வாகனங்கள், கணனி என்பவற்றை வாடகைக்கு எடுத்தல் மற்றும் ரீ சேட் கமரா என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 577,350 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக கொள்வனவு வழிகாட்டிகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் போது பேரவையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 3,756,366 பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 758,795 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,997,571 ஆன வீழ்ச்சிக்கு மொத்த செலவினம் ரூபா 7,052,773 ஆல் குறைவடைந்திருந்த போதிலும் அரசாங்க மானியம் ரூபா 10,047,417 ஆல் குறைவடைந்திருந்தமை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரவையின் அடிப்படை நோக்கமான மனிதவள அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட தொகை, மொத்த மீண்டெழும் செலவினத்திற்கான சத வீதமாக எடுத்துக்கொள்கையில் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

| ஆண்டு | மொத்த மீண்டெழும் செலவினம் | மனிதவள அபிவிருத்தி செலவினம் | மொத்த மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாக மனிதவள அபிவிருத்திச் செலவினம் |
|---|---|---|---|
| | | | சதவீதம் |
| 2008 | 6,728,939 | 659,801 | 09.8 |
| 2009 | 8,675,394 | 1,540,029 | 17.70 |
| 2010 | 12,423,287 | 3,378,959 | 27.20 |
| 2011 | 30,247,869 | 19,182,148 | 63.42 |
| 2012 | 23,195,095 | 10,003,639 | 43.13 |

(ஆ) இலங்கையில் வேலையற்ற தொழிலாளர்களின் தரவு முறைமை ஒன்றைத் தயாரித்துப் பேணுவதற்கு 2011 செப்தெம்பர் மாதம் சபை, தனியார் நிறுவகம் ஒன்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் இணையதளங்கள் மூன்றை உருவாக்கி பேணிவருவதும் அச் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சமர்ப்பிக்கப்பட்டிருந்த கிரய மதிப்பீட்டின் பிரகாரம் இணையதளத்தை தயாரிப்பதற்காகத் தேவையான டெடிகேட்டட் ஸர்வரிற்காக (Dedicated Server) ரூபா 40,000 தொகை

செலவிடப்பட்டிருந்த போதிலும் இச் செயற்பாட்டிற்கு மீண்டும் ரூபா 132,500 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) இவ்வொப்பந்தத்தைக் கையளிப்பதற்கு முன்னர் உரிய செயற்திட்டம் தொடர்பாக முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிராததுடன் அவ்வொப்பந்தத்தை வழங்குகையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டி பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(iii) தரவு முறைமையும் இணையதளமும் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் பேரவையால் 2013 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரை அவை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராமையால் இதற்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா 942,975 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) பிலை நெட் (Fly Net) நிகழ்ச்சித்திட்டம்

''மாற்று தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வாழ்க்கையில் வெற்றிகொள்ளலாம்'' என சுட்டிக்காட்டுவதையும் அதற்காக அவர்களை உரிய பயிற்சி நிறுவகங்களுக்கு அனுப்பிவைப்பதையும் அடிப்படை குறிக்கோளாகக் கொண்டு க.பொ.த (சாதாரண தரம்) மற்றும் (உயர் தரம்) சித்தியடையாத மாணவர்களை வலுப்படுத்துவதற்காக இச்செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பான பரிசீலனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) பரீட்சைத் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டிற்காக வழங்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் உயர் தரம் மற்றும் சாதாரண தரத்தில் சித்தியடையாமையின் காரணமாக இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றச் செய்யப்பட வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 270,048 ஆகும். திட்டமிடப்பட்டவாறு தங்குமிட முகாம்கள் எதுவும் நடாத்தப்பட்டிராததுடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒரே செயற்பாடானது 5 மாவட்ட் கருத்தரங்குகளை நடாத்தியது மாத்திரமேயான போதிலும் இதற்காக 640 மாணவர்கள் போன்ற மிகவும் குறைவான மாணவர்களே பங்குபற்றியிருந்தனர்.

(ii) எஸ் - 03, டபிள்யூ - 09 மற்றும் பிலை நெட் என பல்வேறு பெயர்களால் நடாத்தப்பட்ட மேற்குறித்த பரீட்சைகளில் சித்தியடையாத மாணவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 21,055,033 செலவிடப்பட்டிருந்த போதிலும் இதற்காக 465,057 மாணவர்களை மாத்திரமே இணைத்துக்கொள்ளக் கூடியதாக இருந்தது. அதாவது எதிர்பார்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையில் 2.49 சதவீதம் மாத்திரமேயாகும். அந்த 11,578 மாணவர்களின் செயல்முன்னேற்றம் தொடர்பாக எத் தரவுகளும் பேரவையில் காணப்பட்டிராததுடன் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்தச் செலவினத்தின் 61 சதவீதமும் விளம்பரப்படுத்தலுக்காக இருந்தது.

(ஈ) ஏனைய செயற்திட்டங்கள்

அநுராதபுர மாவட்டத்தில் தனியார் துறையில் தொழில்வாய்ப்பை எதிர்பார்த்துள்ள நபர்களைப் பதிவுசெய்து அவர்களை 2012 மார்ச் 31 இற்கு முன் தொழிலில் ஈடுபடுத்தும் ‘‘ரெகியாவன் சுரகியாவட’’ எனும் செயற்திட்டம் 2012 மார்ச் 31 ஆம் திகதி பூர்த்தியாகியிருந்ததுடன் இதற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 2,218,153 ஆகும். வெளி மதியுரையாளரால் அச் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எதுவும் எய்தப்பட்டிராத அது முழுமையாக வெற்றியளிக்காத செயற்திட்டமாகும். இவ்வாறிருக்கையில் 2012 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்கு இணைச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக எனக் குறிப்பிட்டு தலைவரால் அம் மதியுரையாளர் நியமிக்கப்பட்டு அதற்காக ரூபா 280,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இச் செயற்திட்டத்தைச் அமுல்படுத்துவதற்காக கட்டுப்பாட்டுச் சபையின் மேல் அங்கீகாரமேனும் காணப்படவில்லை.

(ii) ஏனைய செயற்திட்டங்களாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதனால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளைப் போன்று ஆகக் குறைந்தது எந்த விதமான செயற்திட்டங்கள் என்பது குறித்தேனும் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 700,000 தொகையான இச் செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. செயல் முன்னேற்றம் தொடர்பான விபரம் எதுவும் இன்மையால் மதியுரையாளருக்கு ஏதேனும் செயற்பாடு ஒப்படைக்கப்பட்டதா என்பது கூட நிச்சயமின்றிக் காணப்பட்டது.

(iv) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் இது போட்டி விலை மனுக்கோரலுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(v) இச் செயற்திட்டத்தின் மூலம் எய்தப்பட வேண்டிய நோக்கங்கள் இன்மையால் இதற்காக செலவிடப்பட்ட ரூபா 280,000 தொகை விளைவற்றுக் காணப்பட்டது.

(vi) மேற்குறித்த மதியுரையாளருக்கு ரூபா 60,000 தொகை காசாகச் செலுத்தப்பட்டதாக கொடுப்பனவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவரால் அப் பணம் பொறுப்பேற்கப்பட்டதா என்பது குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(உ) தேசத்திற்கு மகுடம் செயற்திட்டம் - 2012

2012 பெப்ரவரி 03 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை அநுராதபுரம் ஓயா மடுவவில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்தி கண்காட்சிக்காக ரூபா 2,529,431 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பான ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பேரவையின் தலைவர் உள்ளடங்கலாக 06 பதவியணியினரும் மதியுரையாளர் உள்ளடங்கலாக 07 பதவியணியினருமாக 13 பேர் மாத்திரம் இக் கண்காட்சியில் பங்குபற்றியிருந்ததுடன் அவர்களுக்காக 2012 பெப்ரவரி 02 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை உணவிற்காக ரூபா 61,180 ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தரால் செலவிடப்பட்டிருந்தது. எனினும், முன்னாள் தலைவரால் மீண்டும் 08 நாட்களுக்காக 25 உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டு ரூபா 88,390 தொகை பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கலாகக் காணப்பட்டது.

(ii) முன்னாள் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலின் படி தனியார் நிறுவகம் ஒன்றிற்கு ரூபா 60,050 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதிலிருந்து பேரவைக்கு எவ்வித நலனும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) தங்குவதற்காக 02 வீடுகளும் ஹொட்டேல்களும் ஒதுக்கப்பட்டு இதற்காக ரூபா 367,178 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட மதியுரையாளர் உட்பட பதவியணியினர் 15 நாட்கள் முழுமையாக அங்கு தங்கியமைக்கான சான்றுகள் இருக்கவில்லை. இவ்வாறே, அவ் விடுதிகளில் காணப்பட்ட வசதிகள், தங்கக் கூடிய நபர்கள் போன்ற விபரங்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பேரவையால் 2012 யூலை முதல் செப்தெம்பர் வரை எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிராமையால் அக் காலப்பகுதியின் போது சம்பளங்கள் மற்றும் ஏனைய பொதுச் செயற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 1,216,361 தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது.

(எ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மொத்த ஏற்பாடுகளின் சேமிப்பு ரூபா 30.49 மில்லியன் தொகையாகியதுடன் இதில் ரூபா 12.90 மில்லியன்

தொகையான ஏற்பாட்டுடனான 06 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே, 02 செயற்திட்டங்களின் ஏற்பாடுகளுக்கும் மிகையாக ரூபா 0.98 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஏ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 27,501,957 தொகை செலவில் பேரவையால் செயற்படுத்தப்பட்ட 13 செயற்திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. இம் மூன்று ஆண்டுகளில் ரூபா 32,564,746 தொகையான மொத்த மனித வள அபிவிருத்தி செலவினத்தின் சதவீதமாகக் கருதப்படுகையில் இது 84 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஐ) 2012 ஆம் ஆண்டின் போது மூலதனம் மற்றும் மீண்டுவருபவையாக அரசாங்கத்திடமிருந்து ரூபா 10,301,090 தொகையான மானியம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாண்டின் போது பேரவையால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 85,090 தொகையான மிகவும் குறைந்த பெறுமதியில் காணப்பட்டது.

## 3.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

2012 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபைக்கூட்டங்கள் 05 தடவைகள் மாத்திரமே நடைபெற்றிருந்ததுடன் அந்த எக் கூட்டத்திற்கும் மூன்று பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் கலந்து கொண்டிராததுடன் மேலும் ஏழு அங்கத்தவர்களின் பங்கேற்பு நலிவான நிலையில் காணப்பட்டது.

## 3.3 வெளிப்படையான முறைகேடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாத்தறை மாவட்ட செயற்திட்டம் மற்றும் அம்பாறை, கேகாலை மாவட்ட மீளாய்வுக் கூட்டங்களிற்காக முறையே 47,100 தொகையும் ரூபா 21,000 தொகையுமாக ரூபா 68,100 கூட்டுத்தொகை தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத்தகைய செயற்திட்டம் மற்றும் கூட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) “ இலங்கை அரசியலில் மஹிந்தவின் கோட்பாடு” எனும் பெயரிலான ஒரு புத்தகம் தயாரிக்கப்படுவதாக பத்திரிகை விளம்பரம் ஒன்று வெளியிடப்பட்டு அதற்கு ரூபா 43,097 தொகையும், ஏனைய செலவினங்கள் ரூபா 26,314 தொகையுமாக ரூபா 69,411 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய ஒரு புத்தகம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 செப்தெம்பர் முதல் 2012 செப்தெம்பர் வரை மனித வள அபிவிருத்தி ஆண்டாக பேரவையால் இனங்காணப்பட்டு அதற்காக இலங்கையின் ஒட்டுமொத்த தொழிற்திறன் சமூகமும் கலந்துகொள்ளக்கூடிய இசைப் போட்டி நிகழ்ச்சி ஒன்றின் மூலம் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்திலான “ தொழிற்திறன் சங்கம்” தேர்விற்கான ரியலிட்டி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு இதற்கான விளம்பரத்திற்காக ரூபா 3,107,497 தொகையும், ஏனைய செலவினங்களுக்காக ரூபா 26,889 தொகையுமாக ரூபா 3,124,386 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் ஊடக விளம்பரங்களை தவிர்ந்த வேறு எவ்வித செயற்பாடும் மேற்கொள்ளப்படாது 2012 யூன் மாதத்தின் பின்னர் இச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டிணைந்த திட்டத்திலுள்ள அமுல்படுத்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட சில செயற்திட்டங்களுக்காக எனக் குறிப்பிடப்பட்டு இணையதள வசதிகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்காக ரூபா 22,400 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எக்குறிக்கோள்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலத்திரனியல் மற்றும் ஊடக விளம்பரத்திற்காக நேரடியாக அந்நிறுவகத்திற்குரிய செயற்பாடுகளை கையளிப்பதற்குப் பதிலாக தனியார் நிறுவகம் ஒன்றிற்கு கொள்வனவு வழிகாட்டிகளைப் பின்பற்றாது

2012 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 4,937,720 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந் நிறுவகம் பேரவையின் முன்னாள் தலைவரின் நிரந்தர வதிவிட முகவரியிலேயே இயங்கிவரும் வியாபாரமென இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சரால் தலைவருக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விலாசத்தின் படியும் அந் நிறுவனக் கடிதத் தலைப்பில் குறிப்பிட்டிருந்த விலாசத்தின் படியும் உறுதிப்படுத்தப்பட்டது.

(இ) 2012 மே மாதம் இரத்தினபுரியில் நடாத்தப்பட்ட ஒரு நாள் மாவட்ட கருத்தரங்கிற்காக முன்னாள் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 19,600 தொகையான எரிபொருள் செலவினத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்கள் அனைத்தும் இதற்கு ஒரு மாதத்திற்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட எரிபொருளுக்கான விலை பட்டியல்களாகும்.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் உப பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது 2010 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்ததிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, எய்தப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதி காண்பிக்கப்பட்டிராமையால் ஆண்டிற்கான செயல் முன்னேற்றத்தை நிதிரீதியாக மதிப்பிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

### 4.2 செயற்பாட்டுத்திட்டம்

2012 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுத்திட்டம் பணிப்பாளர் சபையால் 2012 மார்ச் 29 ஆம் திகதியே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 4.3 கொள்வனவுத் திட்டம்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2(இ) வழிகாட்டலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொருட்களும் சேவைகளும் தொடர்பாக கொள்வனவுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 உள்ளகக் கணக்காய்வு

பேரவையில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்பாடின்றி இருந்ததுடன் வரிசை அமைச்சான இளைஞர் விவகார தொழிற்திறன் அபிவிருத்தி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் பேரவையின் நடவடிக்கைகள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

## 4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் படி, மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட செலவுகளுக்கும் உள்ளபடியான செலவுகளுக்கும் இடையே 03 செலவின விடயங்களில் 75 சதவீதமான முரண்கள் காணப்பட்டன. இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் காரணியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பேரவையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) கொள்வனவு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) கணக்கீடு